Reg. No. 1-M.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

DECEMBER 2, 1930.

ந. 48.] மதராஸ் : செவ்வாய்கிழமை மாலை, 1930-ம் ௵ டிஸம்பர் ௴ 2௳. [PRICE, 6 *pies*

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

டெவெலப்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் ௵ அக்டோபர் ௴ 31௳ (1997-ம் ந. கவர்ன்மெண்ட் உத்தரவு).

நெ. 347.—பிற்படுத் திருத்தப்பட்டபடிக்குள்ள (1911-ம் ௵த்து 12-வது ஆக்டாகிய) இந்துதேசத்துத் தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம் ௵த்திய ஆக்ட் 37-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவையும் (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (h) அடையாளமிட்ட பகுதியையும் (1897 - ம் ௵த்து 10-வது ஆக்டாகிய) 1897-ம் ௵த்து ஜெனரல் க்ளாஸெஸ் ஆக்ட் 21-வது பிரிவுடன் சேர்த்து வாசித்து ஷை உட்பிரிவின்படியும் பகுதியின்படியும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - 1923-ம் ௵த்து சென்னபட்டணம் தொழிற்சாலைகளைக் குறித்த (திருத்தப்பட்ட) விதிகளில் அடியிற்கண்ட திருத்தங்களை இதனால் களிகூர்ந்து செய்கிறார்கள். இந்தத் திருத்தங்கள் முதலில் சொன்ன ஆக்டில் கண்ட 39-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஏற்கனவே பிரசித்தம் செய்யப்பட்டிருக்கின்றன :—

திருத்தங்கள்.

1. ஷை விதிகளில் 25-வது விதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உபவிதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்ட உபவிதியை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(1) ஒவ்வொரு தொழிற்சாலையின் கையாளுகிறவரும் தொழிற்சாலையைச் சேர்ந்த இதர கட்டிடங்களுடன் சம்பந்தப்படாமல் அந்தத் தொழிற்சாலையின் எல்லைகளுக்குள் ஜனங்கள் போகக்கூடிய இடத்திலே கக்குஸுகள் ஏற்படுத்தவேண்டும். ஸ்திரீகள் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டால், புருஷர்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் கக்குஸுகளினின்றும் மறைவாய்ப பிரத்தியேகமான கக்குஸுகளை ஏற்படுத்தவேண்டும். மேலும், 'ஸ்திரீகளுக்கு மாத்திரம்' என்று சுதேச பாஷையிலே தெளிவான எழுத்துக்களில் அந்தக் கக்குஸுகளின் மேல் எழுதவேண்டும். புருஷர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கக்குஸுகளின்மேல் 'புருஷர்களுக்கு மாத்திரம்' என்று அதே மாதிரியாய் எழுதவேண்டும். புருஷர்கள் ஸ்திரீகள் ஆகிய இருவர்களுக்குமான வசதியிடமானது - யாதொரு மியுனிஸிபல் விஸ்தீர்ணத்தில் தொழிற்சாலை இருக்கிற விஷயத்திலே, சம்பந்தப்பட்ட மியுனிஸிபாலிடியால் ஏற்படுத்தப்படக்கூடிய திட்டப்படியும், இதர விஷயங்களிலே, பஞ்சாயத்தைச் சேர்ந்திராத விஸ்தீர்ணங்களில் தாலூகா போர்டாராலும் பஞ்சாயத்தைச் சேர்ந்த விஸ்தீர்ணங்களில் பஞ்சாயத்தாராலும் ஏற்படுத்தப்படக்கூடிய திட்டப்படியும் இருக்கவேண்டும். ஆனால், அது எந்த சந்தர்ப்பத்திலும் அடியிற்கண்ட திட்டத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது :—

I

தண்ணீர் நிறையவிட்டு மலம் அடித்துக்கொண்டு போகும்படி செய்யப்பட்டுள்ள கக்கூஸுகள்

A—புருஷர்கள்.

	உட்காருமிடங்கள்.
மூத்திரம் பெய்வதற்கான இடங்கள் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருந்தால்—	
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை 100 க்கு மேற்படாமலிருக்கும் விஷயத்தில்.	பிரதி 25 வேலையாட்களுக்குமாவது அதற்குக் குறைந்தவர்களுக்காவது ஒன்று.
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை 100 க்கு மேற்பட்டிருக்கும் விஷயத்தில்.	முதல் 100 வேலையாட்களுக்கு 4ம், 100-க்கு மேற்பட்டிருக்கும் வேலையாட்களில் பிரதி 40 பேருக்குமாவது அதற்குக் குறைந்தவர்களுக்காவது ஒன்றும்.
மூத்திரம் பெய்வதற்கான இடங்கள் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிராவிட்டால்—	
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை எதுவாயிருந்தாலும்.	பிரதி 25 வேலையாட்களுக்குமாவது அதற்குக் குறைந்தவர்களுக்காவது ஒன்று.

B—ஸ்திரீகள்.

மூத்திரம் பெய்வதற்கான இடங்கள் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி—	
ஸ்திரீகளாயுள்ள வேலையாட்களின் சங்கியை எதுவாயிருந்தாலும்.	பிரதி 25 வேலையாட்களுக்குமாவது அதற்குக் குறைந்தவர்களுக்காவது ஒன்று.

II

தண்ணீர் நிறையவிட்டு மலம் அடித்துக்கொண்டு போகும்படி செய்யப்பட்டிராத கக்கூஸுகள்.

A—புருஷர்கள்.

	உட்காருமிடங்கள்.
மூத்திரம் பெய்வதற்கான இடங்கள் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி—	
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை 10 க்கு மேற்படாமலிருக்கும் விஷயத்தில்.	1
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை 10 க்கு மேற்பட்டு 25 க்கு மேற்படாமலிருக்கும் விஷயத்தில்.	2
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை 25 க்கு மேற்பட்டு 50 க்கு மேற்படாமலிருக்கும் விஷயத்தில்.	3
புருஷர்களாயுள்ள வேலையாட்களின் சங்கியை 50 க்கு மேற்பட்டிருக்கும் விஷயத்தில்.	முதல் 50 வேலையாட்களுக்கு 3ம், 50க்கு மேற்பட்டிருக்கும் வேலையாட்களில் பிரதி 20 பேருக்கும் ஒன்றும்.

B—ஸ்திரீகள்.

புருஷர்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் திட்டத்தின் படியே.

விவரணம் 1.—'தண்ணீர் நிறைய விட்டு மலம் அடித்துக்கொண்டுபோகும்படி செய்யப்பட்டிராத கக்குஸுகள்' என்பதில், தண்ணீரைக்கொண்டு அசுத்தங்களை அப்புறப்படுத்தும் யாதொரு ஜலதாரை ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்டிராத சகல மாதிரிகளையும் சேர்ந்த கக்குஸுகளும் அடங்கும்.

விவரணம் 2.—(i) மூத்திரம் பெய்வதற்கான இடமானது திறந்தலையான யாதொரு வளவுக்குள் இருக்கிறபட்சத்திலே, பிரதி 100 வேலையாட்களுக்குமாவது 100 க்குக் குறைந்தவர்களுக்காவது குறைந்தபட்சம் 20 சதுர அடியுள்ள அடித்தரை ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(ii) மூத்திரம் பெய்வதற்கான இடமானது அறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறபட்சத்திலே,

(a) பிரதி 50 வேலையாட்களுக்குமாவது 50 க்குக் குறைந்தவர்களுக்காவது மூத்திரம் பெய்வதற்கான இடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

(b) மூத்திரம் பெய்வதற்கான இடங்களானவை ஸானிடரி 137/1928-ம் நம்பரில் கண்டிருப்பதும் ஸானிடரி என்ஜினீரால் அப்போதைக்கப்போது திருத்தப்படக்கூடியதாயுமுள்ள அவருடைய மாதிரிக்குறிப்புப் படத்தின் பிரகாரம் இருந்தாலன்றி மற்றப்படிக்கும்,

இந்த உபவிதியின் தாற்பரியப்படி பிரத்தியேகமான மூத்திரம் பெய்யும் இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக்கருதப்படமாட்டாது.

விலக்கு.—இந்த உபவிதி அமுலுக்கு வரும் தேதியன்றைக்குள்ள எந்த தொழிற்சாலைக்கும் அது பிரயோகப்படாது. ஆயினும், அப்படிப்பட்ட யாதொரு தொழிற்சாலையில் கக்குஸுக்காக ஏற்படுத்தியிருக்கும் வசதியிடமானது தற்கால ஆவசியகங்களுக்கு ஏற்றபடி யில்லையென்றாகிலும், பாழடைந்த ஸ்திதியிலிருக்கிறதென்றாகிலும், மற்றப்படி திருப்திகரமாயில்லையென்றாகிலும் இன்ஸ்பெக்டர் அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே, அவர் - இந்த உபவிதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்டத்தின் பிரகாரம் கக்குஸுக்காகவசதியிடம் ஏற்படுத்தும்படி ஷை தொழிற்சாலையின் சொந்தக்காரருக்கு உத்தரவு செய்யலாம்.

2. ஷை விதிகளைச் சேர்ந்த 26-வது விதியை விட்டுவிடவேண்டும்.

எஸ். வி. ராமமூர்த்தி,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.